மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கடன் வழங்குவதில் சிலபல முறைகளெல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பள்ளிக்கூட ஆய்வாளர்கள் அல்லது மாவட்டக் கல்வி அலுவலாளர்கள் பரிசீலித்து வழங்கி வருகிறார்கள். 1971-72ல் மட்டும் ரூ. 2,11,000 திருமணக்கடனாக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றும் இடர்பாடு இல்லை. அந்தந்த தனியார் பள்ளிகளை நடத்துகிறவர்கள் கடன் கொடுத்து உதவ முன்வருவார்களானால் அதற்கு ஆட்சேபனை இருக்க வழி இல்லை. அது வரவேற்கத்தக்க செயல். ஆனால் அவர்கள் தந்தே தீரவேண்டும் என்று வற்புறுத்த அரசால் இயலாது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு இந்தக் கடன் வசதி எப்போதிருந்து கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 23—1—1971 தேதிய ஆணைப்படி அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் வழங்கலாம் என்று தரப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்பட்டு வருகிறது. தனிக் கேள்வி போட்டால் எந்தத் தேதியில் இருந்து என்று கூற முடியும்.

Bridge across Paraliar.

*65 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is a proposal for the construction of a bridge across Paraliar at Anakkarai near Tiruvettar (Kumarankudi Village Panchayat) in Kanyakumari Distrcit ; and

(*b*) if so, the action taken by the Government thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Selection to Medical course.

*66 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether all the seats in the M.B.B.S course allotted for Burmese refugees and Malaysian and Singapore citizens of Indian Origin have been filled up ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether any complaint has been received by the Government?

1972 டிசம்பர் 7]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) பர்மாவிலிருந்து திரும்பியவர்கள்	..	4
இலங்கையிலிருந்து திரும்பிய இந்தியர்கள்		2
மலேசியா, சிங்கப்பூர் இவற்றில் உள்ள தமிழ்நாட்டு மாணவர்கள்.		5
		11

(உ) இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மலேஷியா, சிங்கப்பூர் இவற்றிலிருந்து திரும்பியவர்களுக்கு விசேஷ சலுகைகள் அல்லது மற்றவிதமான நிபந்தனைகள் ஏதாவது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அவர்களுக்கு என்று இடம் ஒதுக்கி வைக்கப்பட்டு அந்த வகுப்பு, அதாவது மலேஷியா, சிங்கப்பூர் மாணவர்களுக்கு ஐந்து இடங்கள் என்றால் அந்தத் தகுதி உள்ள, அங்கிருந்து வந்த மாணவர்களுக்கு மட்டுந்தான், அங்கிருந்து நேரடியாக ஃபாரின் எம்பஸி மூலமாக அந்த நாட்டுக் குடிமகன் என்ற முறையில் விண்ணப்பித்துக் கொள்கிறவர்கள்தான் இடம் பெறுகிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நம் நாட்டுக் கல்விமுறைக்கும் அந்த நாடுகளில் கல்வி உள்ள முறைக்கும் இடையே மாறுதல் இருப்பதால் அவர்களுக்கு ஏதாவது தகுதியில் சற்று சலுகை காட்டப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆங்கில கல்வி முறையில் பெரும்பாலும் மெட்ரிக்குலேஷன் என்று சொன்னால் ஏறத்தாழ ஒரேவிதமான தகுதி பிரிட்டிஷ் அரசிருந்த காலத்திலிருந்து உருவாகியிருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரேவிதமான தகுதி தீர்மானிக்கப்பட்டு அந்தத் தகுதி உள்ளவைகளுக்கு மட்டும்தான் இடம் தரப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : பர்மா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய பகுதிகளிலிருந்து இங்கு வந்து எம்.பி.பி.எஸ். படிப்பதற்காக விண்ணப்பிக்கக் கூடியவர்களுக்கு நம் அரசு எவ்வளவு சதவிகித இடங்கள் ஒதுக்கியுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏறத்தாழ 11 பேர்கள் ; பர்மாவிலிருந்து திரும்பியவர்கள், இலங்கையிலிருந்து திரும்பியவர்கள், அதாவது இங்கு திரும்பி வந்துவிட்டவர்கள், அவர்களுக்கு நான்கும் இரண்டுமாக ஆறு இடங்கள் அளிக்கின்றன. மலேஷியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் உள்ள தமிழ்நாட்டிலிருந்து சென்று அங்கு வாழும் இனத்தவர்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு 5 இடங்கள் இந்த விகிதாசாரம் மிகவும் குறைந்த அளவாகத் தோன்றினாலும் நம் மாணவர்களுக்கு அதிக இடம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் இதுவே தாராளமாக வழங்கி இருக்கிற முறையில் இடம் பெற்றிருக்கிறது.